**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – பள்ளிகள் – 185 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்கு சுகாதாரக் குட்டைத் தகளிகள் (Napkin Burners) வாங்கி வழங்கிட ரூ.46,25,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது – கூடுதலாக ரூ.8,23,250/–ஐ நிதி ஒதுக்கீடு செய்யக் கோருதல் – திருத்திய நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை**

அரசாணை (நிலை) எண்:72

நாள் : 16.07.2019
விகாரி வருடம்
ஆனித் திங்கள் 31–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண். 103, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–2)துறை, நாள் 30.12.2014.
2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். க3/21131/2014, நாள். 18.04.2018.

---------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளுள் 75 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 110 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கும், ஒரு பள்ளிக்கு ரூ.25,000/– வீதம், மொத்தம் 185 பள்ளிகளுக்கு ரூ.46,25,000/– மதிப்பீட்டில் சுகாதாரக் குட்டைத் தகளிகள் வழங்கிட நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. மேலும், கொள்முதல் விலை தோராய விலைக்கு கூடுதலாக இருக்கும் பட்சத்தில், நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப சுகாதாரக் குட்டைத் தகளிகளை கொள்முதல் செய்யவும், அதே சமயத்தில் விலை குறைவாக இருக்கும் பட்சத்தில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் அவற்றினை வாங்கிவிட்டு, மீதித் தொகையை அரசுக்கு சரண் செய்தல் வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

2. ஆதிதிராவிடர் நல இயக்குநர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கொள்முதல் குழுவால் தேர்வு செய்யப்பட்ட விலைப் புள்ளியின்படி, ஒரு சுகாதாரக் குட்டைத் தகளியின் விலை ரூ.22,300/– எனவும், ஒரு சுகாதாரக் குட்டைத் தகளிக்கு எரிவாயுக் குழாய் பொருத்துவதற்கான செலவினம் ஒரு மீட்டருக்கு ரூ.550/– வீதம் 13 மீட்டருக்கு ரூ.7,150/– எனவும், எனவே ஒரு சுகாதாரக் குட்டைத் தகளி வழங்க ஏற்பட்ட மொத்த செலவு ரூ.29,450/– எனவும், அதன்படி 185 சுகாதாரக் குட்டைத் தகளிகளைப் பொருத்த மொத்தம் ரூ.54,48,250/– செலவானது எனவும் தெரிவித்து, ஏற்கனவே அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட ரூ.46,25,000/– போக மீதம் தேவைப்படும் தொகையான ரூ.8,23,250/–இக்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

த.பி.பா

3. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், ஒரு சுகாதாரக் குட்டைத் தகளியின் விலை ரூ.22,300/- மற்றும் எரிவாயுக் குழாய் பொருத்துவதற்கான செலவினம் ஒரு அடிக்கு ரூ.550/- வீதம் 13 அடிக்கு ரூ.7,150/- என, ஒரு சுகாதாரக் குட்டைத் தகளி அமைப்பதற்கு ரூ.29,450/- என்ற மதிப்பீட்டில் இத்துறையின் கீழ் இயங்கும் 75 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 110 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 185 பள்ளிகளில் சுகாதாரக் குட்டைத் தகளிகளை ரூ.54,48,250/- (ரூபாய் ஐம்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) செலவினத்தில் பொருத்துவதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியும், மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ.46,25,000/- போக மீதம் தேவைப்படும் தொகையான ரூ.8,23,250/-ஐ (ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிதி ஒப்பளிப்பு செய்தும், அரசு ஆணையிடுகிறது:-

> "2225- ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 01 ஆதிதிராவிடர் நலன் - 277 கல்வி- மாநிலச் செலவினங்கள் - AA பள்ளிக் கல்வி - 319 இயந்திரமும் சாதனமும் - 01 வாங்குதல் "
>
> (IFHRMS த.தொ.கு 2225 01 277 AA 31901)"
> (Old த.தொ.கு 2225 01 277 AA 1919)

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2019-2020 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து, சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3-இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2019-2020 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ஆதி(ம)பந/வ.செ.பொ-1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.27708/ஆதி(ம)பந/2019, நாள்.10.07.2019-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.660 (அறுநூற்று அறுபது).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>:-
இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை- 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

த.பி.பா

மாநில முதன்மை கணக்காய்வு தலைவர், சென்னை–600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர் – 600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் – 600 005/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

**நகல்** :–
மாண்புமிகு அமைச்சர் (ஆதி (ம)பந) அவர்களின் முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை –600 009.
நிதி (ஆதி (ம) பந) / (வ.செ.பொ.I, வ.செ.பொ.II ) துறை, சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.5/ஆதிந.7) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
16.7.19